குறை பல ஸ்தாபனங்களிலிருந்து தெரிவிக்கப்படுவதால், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு ஆதரவளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

* 190 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any new vaccine for leprosy treatment has been invented at the Leprosy Research Centre and Sanatorium at Kotagiri near Vellore?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோட்டகிரியில் தொழுநோய் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்த நலம்பேண் மருத்துவமனை இல்லை. ஆனால் வேலூரை அடுத்த காரிகிரியில் அவ்வித நிலையம் ஒன்று உள்ளது. இந்நிலையத்தில் தொழுநோய் சிகிச்சைக்கு ஊசி மூலம் போடும் மருந்து ஒன்றும் கண்டுபிடிக்கப் படவில்லை.

Tuberculosis

* 191 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any survey has been conducted into the incidence of T. B. in the State in 1968; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்தக் கொடிய வியாதி இலட்சக்கணக்கான மக்களை அழித்துவருவதால் இந்த எலும்பு உருக்கி நோயை விஞ்ஞான ரீதியில் தடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோய் குறித்து மாதிரிக் கணக்கெடுப்பு எப்பொழுது எடுக்கப்பட்டது என்று கேள்வி கேட்கப்பட்டது. 1955-ம் ஆண்டிலிருந்து 1958-ம் ஆண்டு வரையில் (இந்தியா முழுவதிலும்) அப்படிப்பட்ட மாதிரிக் கணக்கெடுப்பு எடுக்கப் பட்டது. ஆனால், தமிழகத்தில் அப்பொழுது அந்தக் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. அகில இந்திய கணக்கெடுப்பு அடிப்படையில் பார்க்கும்போது, 1.4 சதவீதம் அளவில் இருந்தது, 1.8 சதவீதமாக இந்த எலும்புருக்கி நோய் பற்றியிருப்பதாகக் கணக்கு இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில், எலும்புருக்கி நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தக்க முறைகள் கையாளப்படுகின்றன. அதுபற்றி அரசு தீவிரமான கவனம் செலுத்தி வருகிறது.